www.padippakam.com



# களம் பல கண்ட யாழ் கோட்டை

## பகுதி: நான்கு

## ஈழ யுத்தம் - 1

நீலவண்ணன்

இவ்வளவு வரலாற்று நிகழ்ச்சிகளையும் யாழ்ப்பாணக்கோட்டை உள்வாங்கி நிமிர்ந்து மோனத்தில் நின்றது. அதன் அமைதியையும் யாழ்ப்பாண மக்களது நிம்மதியையும் குலைக்கின்ற நிகழ்ச்சி 1961-ம் ஆண்டு நிகழ்ந்தேறியது.

### 20 பெப்ரவரி 196...

ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டக் கச்சேரிகளின் முன் குழுமி நிர்வாகம் நடைபெறாது தடுத்து, சாத்வீக முறையில் சத்தியாக்கிரகம் ஆரம்பித்தனர். தமிழ் பிரதேசத்தின் மக்களனைவரும் உணர்வு பூர்வமாக இதில் கலந்துகொண்டனர். தமிழ் மக்களின் சுய அரசாட்சியை வலியுறுத்தும் குறியீடாக தமிழரசு தபாற் சேவை ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. இச் சத்தியாக்கிரகம் 18 ஏப்ரல் 1961 வரை பெரும் இயக்கமாக நிகழ்ந்தது. இதனை முறியடிப்பதற்காக இராணுவம் முதன்முதலாக வடக்கே அனுப்பப்பட்டு நிலைகொண்டது.

01 மார்ச் 1961-ம் திகதி, பலாலி விமான நிலையத்தில் சிறீலங்கா இராணுவத்தினர் இறக்கப்பட்டனர். சிறீமாவோ பண்டாரநாயக்கா அரசு இரத்மலான விமானத்தளத்திலிருந்து இராணுவ வீரர்களை அனுப்பி வைத்திருந்தது. கடற்படைக் கப்ரின் ராஜன் கதிர்காமர் தலைமையிலும், பிரதிப் பொலிஸ்மா அதிபர் வன்டென்பேர்க் தலைமையிலும் கடற்படையினரும் பொலீசாரும் யாழ்ப்பாணத்தில் நிலைகொண்டனர்.

02 மார்ச் 1961 அதிகாலை கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்த மெயில் றெயினில் கேர்ணல் உடுகம தலைமையில் இன்னொரு தொகுதி இராணுவம் வந்து இறங்கியது. இவர்கள் உடனடியாக யாழ்ப்பாணக் கோட்டைக்கு வந்து தங்கினர்.

17 ஏப்ரல் 1961 காலை வேளையில் 350 இராணுவ வீரர்களையும், 15 இராணுவ அதிகாரிகளையும் சுமந்தபடி ஒரு விசேஷ புகையிரதம் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தது. இவர்களோடு கோட்டையில் ஏறத்தாழ 600 இராணுவ வீரர்கள் சேர்ந்து விட்டனர். 18, ஏப்ரல் அதிகாலை சத்தியாக்கிரகிகள் அடித்து, உதைத்து, தாக்கப்பட்டு அப்புறப்படுத்தப்பட்டனர். அன்றிலிருந்து இரு நாட்கள் ஊரடங்குச்சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டு, யாழ்ப்பாணம் பொதுமக்கள் பலர் தாக்கப்பட்டனர். சமஷ்டிக் கட்சிப் பாராளுமன்றப் பிரதிநிதிகளும், முக்கிய ஆதரவாளர்களும் இரவோடிரவாக கைது செய்யப்பட்டு, ஆறு மாதங்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டனர்.

அன்று யாழ்ப்பாணக் கோட்டைக்கு வந்த சிறீலங்கா இராணுவம் பின்னர் தொடர்ந்து அங்கு அடிக்கடி முகாமிட்டுக் கொண்டது . சுதந்திர உணர்வு கொண்ட தமிழ் மக்களை என்றும் அடக்கி வைத்திருப்பதற்கு நிரந்தர இராணுவ முகாம்கள் அவசியமானவை எனச் சிங்கள அரசு கருதத்தொடங்கியது.

1962 ஆம் ஆண்டு அரசுக்கு எதிராக இராணுவபொலிஸ்சதி ஒன்று நிகழவிருந்தது. அச்சதி அம்பலமாகியதால், கைது செய்யப்பட்டவர்களில் ஒரு சிலர் யாழ்ப்பாணக்கோட்டை மறியற் சாலையில் சிறைவைக்கப்பட்டனர்.

## II

### 05 ஏப்ரல் 1971.

நள்ளிரவு 11.30 மணி.

யாழ்ப்பாண நகரம் நல்ல உறக்கத்தின் தழுவலில் ஆழ்ந்திருந்த வேளையில், யாழ்ப்பாணம் கோட்டைப் பக்கம் இரு -ந்து துப்பாக்கிகளில் இருந்து விடுபட்ட சன்னங்கள் வெடித்துச் சிதறுகின்ற சத்தம் எழுந்தது. அமைதியான யாழ்ப்பாணத்தின் மோனத் தூக்கத்தை அத் துப்பாக்கி வெடிச்சத்தம் சிதைத்தது. ஆங்கிலேயர் காலத்துக்குப் பின்னர் அப்படியான தொடர்ச்சியான துப்பாக்கி வெடிச்சத்தத்தை யாழ்ப்பாணம் கேட்டதில்லை. சுதந்திரமடைந்த பின்னர் அதுதான் முதன்முதல் தொடர்ந்துகேட்ட துப்பாக்கிச் சத்தம். அதுதான் முதன் முதல் யாழ்ப்பாணத்து மக்களின் நித்திரையைக் குழப்பிய துப்பாக்கிச் சத்தம்.

அதன் பின்னர் யாழ்ப்பாண மண்ணில் இன்னமும் துப்பாக்கி வேட்டுக்களின் சத்தம் ஓயவில்லை. நித்திரைக்கு ஒரு தாலாட்டு, மாதிரி துப்பாக்கி வெடிச் சத்தம் அவசியம் போலாகிவிட்டது இன்று.

ஆம். யாழ்ப்பாணக் கோட்டைச் சிறைச்சாலையில் சிறைப்பட்டிருக்கும் தங்கள் இயக்கத்தின் மாபெருந் தலைவன் றோகன விஜயவீரவை, மீட்டுச் செல்வதற்காக தென்னிலங்கையிலிருந்து இங்கு வந்த ஜனதா விமுத்திப் பெரமுன என்ற ஜே.வி.பி. இயக்கத்தினரின் மீட்புத் தாக்குதல் நடந்துகொண்டிருந்தது. யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தையும், யாழ்ப்பாணக், கோட்டைக்குள் புகுந்து சிறைச்சாலையையும் ஜே.வி.பி. இயக்கத்தினர் முற்றுகையிட்டுத் தாக்கினர்.

அக் காலத்தில் யாழ்ப்பாணம் கோட்டைக்குள் எந் நேரமும் சர்வ சாதாரணமாக உட் சென்று வரலாம். மாலை வேளைகளில் நேரம் கிடைத்தால் உள் மைதானத்தில் விளையாடிவிட்டும் வரலாம். ஆக சிறைச்சாலைப் பகுதியில் மட்டும் ஜெயிலர்கள் காவலிருப்பார்கள்.

இலங்கைச் சுதந்திரத்தின் பின் முதன் முதல் யாழ்ப்பாணக் கோட்டைத் தாக்குதல் நடந்தது. ஏன்? எதற்கு?

சிறீ லங்காவில் முதலாளித்துவ ஆட்சியாளருக்கு ஏதிராக ஒரு பெரும் புரட்சியை ஏற்படுத்தி மக்களாட்சியை ஏற்படுத்தும் நோக்குடன் கெரில்லா யுத்தத்தை ஜாதிக எச்சத் பெரமுன இளைஞர்களைச் சேர்த்து நடாத்தியது. அதன் தலைவர் றோகன விஜயவீரவின் கோட்பாடு மிகத் தெளிவானது இலகுவானது. "எந்த ஒரு புரட்சியும் பாட்டாளிகளினால் ஆயுதம் எடுக்காமல் வெற்றியடைந்ததில்லை. ஆயுதப் போராட்டத்தில் முதலாளித்துவ வர்க்கம் அதிகாரத்தைச் சமாதானமாகக் கையளித்ததுமில்லை. அரச யந்திரங்கங்கள் தாக்கப்பட வேண்டும்."

1971 இல் நாடளாவிய புரட்சியொன்றினை தோற்றுவிக்க றோகன விஜயவீர முயன்றார். ஆனால், அதற்கு முன் 13 மார்ச் 1971 அன்று அம்பாறையில் வைத்துப் பொலீசாரால் கைது செய்யப்பட்டார். அவருடன் அவரியக்கத்தைச் சேர்ந்த லால் சோமசிறீ, பிரேமரத்ன, நிசங்க



விஜயரத்ன, ஹெலி சேனநாயக்க ஆகியோரும் கைதாகினர். அவர்கள் முதலில் மட்டக்களப்புச் சிறையில் வைக்கப்பட்டனர். பின்னர் கொழும்பு மகசின் சிறையிலும், கொழும்பு றிமான்ட் சிறையிலும் வைக்கப்பட்டனர். அங்கு இவர்களை வைத்திருப்பதில் பாதுகாப்புக் கஷ்டங்கள் இருப்பதை அறிந்து, 14 மார்ச் 1971, இராணுவ வாகனங்களில் யாழ்ப்பாணக் கோட்டைச் சிறைச்சாலைக்கு இடம் மாற்றப்பட்டனர். அன்றே நாடு முழுவதும் அவசரகாலநிலைமை பிரகடனப்படுத்தப்பட்டது. வெகு இரகசியமாக இது நடந்தாலும் சிறை இடமாற்றம் வெளியில் தெரிய வந்தது. 18-ம் திகதி றோகன விஜயவீரவின் தாயார் மகனைப் பார்த்துச் செல்ல, யாழ்ப்பாணக் கோட்டைச் சிறைக்கு வந்தார். 20-ம் திகதி எஸ்.டி. பண்டாரநாயக்கவும், மாத்தயாவும் (இது வேறு மாத்தயா, இவரின் பெயர் உயன் கொட) காரில் யாழ்ப்பாணம் வந்தனர். அவர்களால் கோட்டை சிறையில் இருந்த விஜயவீரவைப் பார்க்க முடியவில்லை. அனுமதி கிடைக்கவில்லை. எஸ்.டி. பண்டாரநாயக்க, சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆரம்பகால அங்கத்தவராக இருந்தவர். . கம்பகாப் பாராளுமன்றப் பிரதிநிதியாகவும் விளங்கியவர். சிறீ லங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து நீக்கப்பட்டதும், பீக்கிங் கம்யூனிசக் கட்சி அங்கத்தவரானார். பின்னர் ஜே.வி.பி. ஆதரவாளரானார்.

21 மார்ச் 1971 யாழ்ப்பாணக் கோட்டைச் சிறைச்சாலையிலிருந்து, விஜயவீராவும் அவருடன் லால் சோம சிறீ, பிரேமரத்ன ஆகியோரும் கல்முனை நீதிமன்றத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். நீதிமன்றத்து அடைப்புக் கூட்டினுள் இருக்கும்போது, விஜயவீர மற்றைய இருவருக்கும் தெளிவாக ஒரு தாக்குதலிற்கான விளக்கத்தைக் கொடுத்தார். 'என்னைச் சிறையில் இருந்து விடுவிப்பதற்கு 500 ஜே.வி.பி. போராளிகள் யாழ்ப்பாணம் வரவேண்டும். சிறையைத் திட்டமிட்டு உடைத்து என்னை உடன் விடுவிக்க வேண்டும். அவ்வாறு வருபவர்களுடன் லால் சோம சிறீ அல்லது பிரேமரத்ன கூட வந்து நான் இருக்கும் . சிறை அறையைக் காட்டவேண்டும். இதனை இன்று ஜே.வி.பி.யின் அடுத்த தலைவர்களான சனத் என்பவரிடம் அல்லது பியதிலகவிடம் கூறுக' என விஜயவீர தகவல். அனுப்பினார். கல்முனை நீதிமன்றத்தில் சோமசிறீயும் பிரேமரத்னவும் எதிர்பார்த்தது மாதிரி விடுதலையாகினர். விஜயவீர மீண்டும் கோட்டைச் சிறைக்குக் கொண்டு வரப்பட்டார்.

விஜயவீரவின் தகவல் உரியவர்களிடம் சேர்க்கப்பட்டது. திட்டம் வகுக்கப்பட்டது. யாழ்ப்பாணத்திற்குச் சிலர் அனுப்பப்பட்டனர்.

28-ம் திகதி எஸ்.டி. பண்டாரநாயக்க கொழும்பிலிருந்து தொலைபேசி மூலம், யாழ்ப்பாணத்தில் இருக்கும் தன் நண்பர் பாஸ்கரன் என்பவரை அழைத்தார். காலை யாழ்தேவியில் யாழ்ப்பாணம் வருவதாகவும் புகையிரத நிலையத்தில் சந்திக்குமாறும் தகவல் கொடுத்தார். பாஸ்கரன் அவரை யாழ்ப்பாணப் புகையிரத நிலையத்தில் சந்தித்தார். பண்டாரநாயக்காவுடன் மஞ்சு என்பவரும் வந்திருந்தார். பாஸ்கரனின் காரில் ஏறி அவரின் வீடு சென்றனர். சுன்னாகத்தைச் சேர்ந்த நாகரத்தினம் என்பவரையும் சந்தித்தனர். மறுநாள் யாழ்ப்பாணக் கோட்டைச் சிறைச்சாலைக்குச் சென்று விஜயவீரவைச் சந்திக்க முயன்றனர். அனுமதி வழங்கப்படவில்லை. அதனால் பண்டாரநாயக்க கொழும்பு திரும்பிச் செல்ல நேர்ந்தது. ஏப்ரல் 1-ம் திகதி மாத்தயா, யாழ்ப்பாணத்திற்கு வந்து காரைநகருக்குச் சென்று, திலகரத்ன என்ற கடற்படை வீரனைச் சந்தித்தார். கடற்படை வீரர்களில் சிலர் விஜயவீரவை விடுவிக்க் உதவுவதாகக் கூறினர். ஏப்பிரல் 3-ம் திகதி, மீண்டும் யாழ்ப்பாணத்திற்கு வந்த மஞ்சு, பாஸ்கரனைச் சந்தித்து தனக்கு கொஞ்சம் டைனமைற் வெடிகுண்டுகள் செய்யத் தேவை எனக் கேட்டார். அவரைப் பாஸ்கரன், வேலாயுதம் என்பவரிடம் அழைத்துச் சென்று அறமுகப்படுத்தி வைத்தார். மஞ்சு கேட்ட டைனமற் கிடைக்கவில்லை. அவர் கொழும்புக்குத் திரும்பிச் சென்றார்.

விஜயவீரவைச் சிறையுடைத்து விடுவிப்பதற்காக யாழ்ப்பாணத்தில் நிலைகொள்வதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் நடந்தேறின. ஏப்ரல் 5-ம் திகதி யாழ்ப்பாணக் கோட்டைச் சிறைச்சாலை தாக்குவதற்கான திட்டம் தீட்டப்பட்டது. ஏப்பிரல் 5-ம் திகதி, அதிகாலை கொழும்பிலிருந்து வித்தியோதய மாணவர்கள், ஆயுதங்களை மறைவாக்கியபடி, ஈபேட் சில்வா கம்பனியாரின் பஸ் ஒன்றில் யாழ்ப்பாணத்திற்கு வந்தனர். 250 கைக்குண்டுகள் யாழ்தேவி வழியாக யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்பட்டன. இந்தத் தாக்குதல் அணிக்குத் த்லைமை தாங்கி லால் சோமசிறி வந்தார். இன்னொரு பிரிவினர், பியதிலக தலைமையில், 100 பேர் கொண்ட குழுவாக பஸ்ஸில் வந்தனர். அவர்களால் புளியங்குளத்திற்கு இப்பால் வரமுடியாது போனது. பியதிலகாவின் தலைமையில் வந்த குழுவினர் புளியங்குளத்தில் தரித்துநின்ற சங்கதி, முதலில் யாழ்ப்பாணம் வந்தவர்களுக்குத் தெரிந்திருக்கவில்லை.

அவர்கள் திட்டமிட்டபடி சரியாக நள்ளிரவு 11.30 மணிக்கு யாழ்ப்பாணம் பொலீஸ் நிலையத்தையும் யாழ்ப்பாணக் கோட்டைச் சிறைச்சாலையையும் தாங்கத் தொடங்கினர். கோட்டைக்குள் புகுந்த அவர்கள் சிறைச்சாலையை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததும், சிறைக்காவலர்கள் பதுங்கிக்கொண்டனர். விஜயவீரவின் சிறை அறைக்குக் காவலிருந்த ஜெயில் கார்ட் அப்புக்குட்டி இரத்தினம், பெண்கள் சிறைச்சாலைக்கு அருகிலிருந்த படிகளினூடாகக் கோட்டை மதிலில் போராளிகள் ஏறுவதைக் கண்டார். அவ்வாறு ஏறிச் செல்லும்போது ஒரு கைக்குண்டினைப் பெண்கள் சிறைச்சாலைக் கூரை மீது வேணுமென்றோ, தற்செயலாகவோ போட்டார்கள். அது கூரையைப் பிய்த்துக்கொண்டு விழுந்து பெண் வார்டர் செல்லம்மா என்பவரின் வலது காலைத் துண்டித்தது. இவரே முதன்முதல் வெடிகுண்டிற்குக் காலைக் காவுகொடுத்த யாழ்ப்பாணப் பெண்.

(தொடரும்)

படிப்பகம்